ஸ்ரீ:

அடியேனுடைய எண்பத்திரண்டாவது பிராயத் தொடக்கத்தில் ஸ்ரீ பகவத் ராமாநுஜ தர்சன ஸாரார்த்தங்களை எண்பத்திரண்டு வாக்யங்களில் விவரிக்கிறேன்.

ஸ்ரீபகவத் ராமாநுஜ ஸித்தாந்த ஸாரம்.

1. முன்னுரை விண்ணப்பம்.

"மதிவிகற்பால் பிணங்குஞ் சமயம் பலபலவாக்கி" என்று நம்மாழ்வாரருளிச் செய்தபடியே உலகில் பலபல மதங்கள் தோன்றியிருக்கின்றன; அவை வைதிக மதமென்றும் அவைதிக மதமென்றும் பொதுவாக இருவகுப்பாகும்.

2. வேதத்தைப் பிரமாணமாகக்கொள்ளும் மதம் வைதிகமதம். வேதத்தைப் புறக்கணித்து ஸ்வதந்திரமாகத் தோன்றிய மதம் அவைதிக மதம். அவைதிக மதங்களிற் காட்டிலும் வைதிக மதம் சிறந்ததென்னுமிடத்தை நாம் விவரிக்க வேணுமோ?

3. வைதிக மதங்களுள் பரமபவித்திரமான பகவத்ராமாநுஜ தரிசனம் மிகச் சிறந்து விளங்குகின்றது. இதுதான் விசிஷ்டாத்வைத தரிசனமென்பது. நம்மாழ்வார் திருவாய்மொழி தொடங்கும்போது "உளன் சுடர்மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே" என்கிற பாசுரத்தில் 'நாம் போற்றும் பரமபுருஷன் வேதங்களிலும் வேதாந்தங்களிலும் விளங்குபவன்' என்றருளிச் செய்கையாலே இக்கலியுகத்தில் அவ்வாழ்வார் தொடக்கமாகப் பரவியுள்ள விசிஷ்டாத்வைத ஸம்பிரதாயம் பரம வைதிகமென்னத் தட்டில்லை. ப்ரமாணம், ப்ரமாதா, ப்ரமேயம் என்ற மூன்று வகுப்புகளும் நம் தரிசனத்தில் சீர்மைபெற்று விளங்குவன.

4. ப்ரமாணப்ரமாத்ருநிர்தேசம்.

"ஆழ்வார்கள் வாழி, அருளிச்செயல் வாழி, தாழ்வாதுமில் குரவர் தாம் வாழி—ஏழ்பாரு முய்ய அவர்களுரைத்தவைகள் தாம்வாழி, செய்யமறை தன்னுடனே சேர்ந்து" என்னும் உபதேசரத்தினமாலைப் பாசுரத்தில் ப்ரமாணங்களும் ப்ரமாதாக்களும் ஸாரமாகத் தெரிவிக்கப்பட்டார்கள். ஸம்ஸ்க்ருத த்ராவிட வேதங்களாகிற உபய வேதங்களும் ஸ்ரீபாஷ்ய பகவத்விஷயாதிகளும் நமக்கு ப்ரமாணம்; யதார்த்தஜ்ஞான நிதிகளான ஸ்ரீமந்நாதமுனிகள் ஆளவந்தார் எம்பெருமானார் போல்வாரான மஹாசார்யர்களே ப்ரமாதாக்களில் தலைசிறந்து விளங்குபவர்.

5. தத்வஹித புருஷார்த்த விவேகம்.

ஸகல சேதநாசேதந சரீரகனாய் ஸமஸ்த கல்யாணகுணாத்மகனான ஸ்ரீமந்நாராயணனே பரதத்வமென்றும், அவனுடைய திருவடித் தாமரைகளில் பண்ணும் ப்ரபத்தியே பரமஹிதமென்றும், "நலமந்தமில்லதோர் நாட்டிலே நித்யாநந்தமயமான நித்ய கைங்கர்யமே பரம புருஷார்த்தமென்றும் ஆக இங்ஙனே கூறப்படும் அர்த்த விசேஷங்களே ப்ரமேய ச்ரேஷ்டங்களாக விளங்குகின்றன. இத்தகைய ப்ரமாண ப்ரமாத்ரு ப்ரமேய வைசிஷ்ட்யமே நம்முடைய தரிசனத்தின் சிறப்புக்கு ஹேதுவாம்.

6. குத்ருஷ்டி பாஹ்ய மதங்களின் விவரணம்.

பரமவைதிகர்களென்கிற ஏற்றம் நமக்கே உரியது. ப்ரத்யக்ஷத்தாலோ அநுமானத்தாலோ அறிந்துகொள்ள முடியாத அர்த்த விசேஷங்களையறிவிக்கும் வாங்மயமே வேதமெனப்படும். "ப்ரத்யக்ஷேணநுமித்யா வா யஸ்தூபாயோ ந புத்த்யதே, யத் தம் விதந்தி வேதேந தஸ்மாத் வேதஸ்ய வேததா" என்கிற ப்ரமாணம் இங்கே அநுஸந்தேயம். வேதத்தை ப்ரமாணமாக இசையாத சார்வாக ஜைந பௌத்தாதிகள் பாஹ்யர்களெனப்படுவர்கள். வேதத்தைப் பரமப்ரமாணமாக இசைந்துவைத்தும் பரப்ரஹ்மம் குணசூந்யமென்றும் அலக்ஷ்மீகமென்றும் அசரீரமென்றும் விபூதிவிரஹிதமென்றும் இங்ஙனே மனம்போனபடியெல்லாம் பேசுபவர்கள் குத்ருஷ்டிகளெனப்படுவர். குத்ருஷ்டிகளானாலும் வேதத்தை ப்ரமாணமாக இசையுமவர்கள் வேதபாஹ்யர்களிற் காட்டிலும் மேம்பட்டவர்களன்றோ வென்று சிலர் நினைக்கக்கூடும். பாஹ்யர்களோடு குத்ருஷ்டிகளோடு ஒரு வாசியில்லை யென்றருளிச் செய்கிறார் கூரத்தாழ்வான் [ஸ்ரீவைகுண்டஸ்தவே-14].

7. ஆழ்வான் ஸ்ரீஸூக்தி காட்டுதல்

"பாஹ்யா: குத்ருஷ்டய இதி த்விதயேப்யபாரம் கோரம் தமஸ் ஸமுபயாந்தி நஹீக்ஷஸே தாந், ஐக்தஸ்ய காநந ம்ருகைர் ம்ருகத்ருஷ்ணிகேப்ஸோ: காஸாரஸத்வ நிஹதஸ்ய ச கோ விசேஷ:?" என்கிற சுலோகம் இங்குக் காணத்தக்கது. வேத பாஹ்யர்களும் வேத குத்ருஷ்டிகளும் துல்யயோக க்ஷேமர்களென்பதற்கு ஒரு அற்புதமான த்ருஷ்டாந்தம் காட்டுகிறாரிதில்.

8. ஆழ்வான் ஸ்ரீஸூக்தியின் பொருள் விளக்கம்.

விடாய் மிகுந்துத் தண்ணீரைத் தேடியோடி இரண்டு மிருகங்கள் புறப்பட்டன; அவற்றில் ஒரு மிருகமானது தடாகத்திற் புகாதே கானலைக் கண்டு பாநீய ப்ரவாஹமாக மயங்கியோடிக்கொண்டேயிருக்கையில் வழியில் புலியின் வாயிலே விழுந்து மாண்டொழிந்தது. இது இப்படியாக, மற்றொரு மிருகமானது விடாய் தீரப்பெறுவதற்கு உண்மையாகத் தண்ணீருள்ள தடாகத்திலேயே சேர்ந்தும் துறைதப்பி யிழியவே அங்குக் கிடந்த முதலையினாலே கதுவப்பட்டு மாண்டொழிந்தது. ஆக இரண்டு மிருகங்களும் தடாக ப்ரவேச அப்ரவேசங்களாலே சிறிது வைலக்ஷண்யம் பெற்றிருந்தாலும் விநாசம் இரண்டுக்கும் துல்யமே. அதுபோலவே குத்ருஷ்டிகளும் பாஹ்யர்களும் வேதப்ராமாண்ய அங்கிகார அநங்கீகாரங்களாலே சிறிது வாசிபெற்றிருந்தாலும் விநாசத்தில் வாசியற்றவர்களே யென்றதாயிற்று.

9. நமது கர்த்தவ்யம்.

அந்த பாஹ்யர்களும் குத்ருஷ்டிகளும் கிடக்கட்டும். வேதக் கடலில் நாம் உள்ளபடி அவகாஹித்து அர்த்த ரத்னங்களைக் கொள்ளை கொண்டு அநுபவித்து ஆனந்திக்கக் கடவோம். நம்முடைய ஆழ்வார்களும் ஸ்ரீநாத யாமுநயதிவராதிகளான ஆசார்யர்களும் காட்டின வழியையடியொற்றி நமது தர்சனத்தின் நற்பொருள்களை நிரூபிப்போம். ... ... ☼

10. வேதத்தில் காண்டமிரண்டென்கிறவிபாகம்.

வேதம் கர்மகாண்ட மென்றும் ப்ரஹ்மகாண்டமென்றும் இரு வகுப்பாக வுள்ளது. பூர்வபாகம் கர்மகாண்ட மென்றும், உத்தரபாகம் ப்ரஹ்மகாண்ட மென்றும் வழங்கப்படும். உபநிஷத்துக்களையே ப்ரஹ்மகாண்ட மென்பது. பகவானுக்கு ஆராதன ரூபங்களான யஜ்ஞம் முதலிய கரும விசேஷங்களை விரிவாகக் கூறும் வேதபாகம் கர்ம காண்ட மென்றும், அக்கருமங்களினால் ஆராதிக்கப்படுகின்ற பகவானுடைய ஸ்வரூப ரூப குணங்களை விரிவாகக் கூறும் வேதபாகம் ப்ரஹ்மகாண்ட மென்றும் சொல்லிற்றாயிற்று.

11. உபநிஷத்தென்பதுபற்றி.

இதுவே உபநிஷத்தென்கிறபெயராலும் வழங்கும். 'உப-நிஷீததி' என்கிற வ்யுத்பத்தி கொண்டது உபநிஷத்தென்கிற பதம். பகவானுடைய அருகேயுள்ள தென்கை. "வேதைச்ச ஸர்வை ரஹமேவ வேத்ய:" என்கிற கீதையின்படி கர்ம காண்டமுங்கூட பகவானை ப்ரதிபாதிக்கவல்லதேயாயினும் அந்த ப்ரதிபாதனம் வ்யவஹிதமாயிருக்கும். உபநிஷத்து அவ்யவஹிதமாக ப்ரதிபாதகமாயிருக்கும்.

12. உபயமீமாம்ஸைகள் அவதரித்தமை கூறுதல்.

கர்மகாண்டத்தில் தோன்றும் சங்கைகளைப் பரிஹரிப்பதற்காக ஜைமிநி யென்னும் மஹர்ஷி யெழுந்து பதினாறு அத்யாயங்களோடு கூடிய ஒரு சாஸ்த்ரத்தை யியற்றினர். அதற்குப் பூர்வமீமாம்ஸையென்று பெயர். இதில் பன்னிரண்டு அத்யாயங்களே ஜைமினியால் இயற்றப்பட்டவை யென்றும், மேல் நான்கு அத்யாயங்கள் காசக்ருத்ஸ்ந மஹர்ஷியால் இயற்றப்பட்டவை யென்றும் ஒரு பக்ஷமுண்டு. இதைப்பற்றி இங்கு விசாரவிஸ்தரம் வேண்டா. "வ்ருத்திக்ரந்தே து ஜைமிந்யுபரசிததயா ஷோடசாத்யாய்யுபாத்தா" இத்யாதியான (தேசிகனது) அதிகரண ஸாராவளி ச்லோகம் காண்க. "ஜைமிநீயம் ஷோடசலக்ஷணம்" என்பது பொதுவான வார்த்தை. போதாயன வ்ருத்திக்ரந்தத்தில் பதினாறு அத்யாயங்களும் ஜைமிநிப்ரோக்தமென்று கூறப்பட்டுள்ளது. (லக்ஷணமென்று அத்யாயத்திற்குப் பெயர்.) ப்ரஹ்மகாண்டமென்னும் உபநிஷத் பாகத்தில் தோன்றும் சங்கைகளைப் பரிஹரிப்பதற்காக வ்யாஸ மஹர்ஷி யெழுந்து நான்கு அத்யாயங்கள் கொண்டவொரு சாஸ்த்ரத்தை இயற்றினர். அதற்கே சாரீரகமீமாம்ஸை யென்று பெயர். உத்தரமீமாம்ஸை யென்றும் வழங்குவர். ப்ரஹ்மஸூத்ர மென்பது இதனையே.

13. பாதங்களையும் அதிகரணங்களையும் ஸூத்திரங்களையும்பற்றி.

ஒவ்வோரத்யாயத்திலும் நான்கு பாதங்களுள்ளன. ஆகவே பதினாறு பாதங்கள் கொண்டது சாரீரகமீமாம்ஸை யென்றதாயிற்று. இதில் ஒவ்வொரு விஷயத்தைப் பற்றி சர்ச்சை செய்து நிர்ணயிக்கும் பகுதிக்கு அதிகரணமென்று பெயரிடப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட அதிகரணங்கள் இந்த மீமாம்ஸையில் (156) நூற்றைம்பத்தாறு உள்ளன. சில அதிகரணங்களில் ஒரே ஸூத்ரமிருக்கும். பல அதிகரணங்களில் பலஸூத்ரங்கள்; ஆகஸூத்ரங்களின் லக்கம் (545) ஐந்நூற்று

நாற்பத்தைந்து என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. ஆக, நான்கு அத்யாயங்களை யும் பதினாறு பாதங்களையும் நூற்றைம்பத்தாறு அதிகரணங்களையும் ஐந்நூற்று நாற்பத்தைந்து ஸூத்ரங்களையும் கொண்டது ப்ரஹ்மஸூத்ர சாஸ்த்ரமென்ற தாயிற்று.

14. சாரீரகமீமாம்ஸா பாஷ்யங்கள் தோன்றியதுபற்றி.

தத்வஹித புருஷார்த்தங்களை நாம் தெரிந்துகொள்வதற்கு உபநிஷத்துக் களே தஞ்சமாகும். அவ்வுபநிஷத்துக்களின் பொருள்களை ஸம்சய விபர்யய மற நிஷ்கர்ஷித்து விளக்கக்கூடியது இந்த ப்ரஹ்ம ஸூத்ர சாஸ்த்ரமேயாதலால் வேதாந்திகளுக்கு இதுவே புகலாயிற்று. இந்த சாஸ்த்ரத்தின் பொருளை நிஷ்கர்ஷ மாகவும் நிஷ்கல்மஷமாகவும் தெரிந்துகொண்டவர்களே வேதாந்திகளென்றும் ப்ரஹ்மஜ்ஞானிகளென்றும் சொல்லத் தகுதியுடையார். மஹர்ஷிகளியற்றிய ஸூத்ரங்களின் பொருளை நம்போல்வார் சிறிதும் அறியகில்லாரகளாதலால், நம் போன்ற அல்பமதிகளிடத்தில் பரமகருணை கொண்ட பூருவர்கள் அந்த ஸூத்ரங் களின் அர்த்தத்தை விளக்கி பாஷியங்கள் இயற்றியுள்ளார்கள். த்வைதம் அத் வைதம் விசிஷ்டாத்வைதம் என மூன்று மதங்கள் உலக ப்ரஸித்தமாக வழங்குமவை. இம் மூன்று மதங்களிலும் பாஷ்யங்கள் அவதரித்துள்ளன. அத்வைத மதத்திற்காக சங்கராசாரியர் பாஷ்யமியற்றினார். த்வைத மதத்திற்காக ஆனந்த தீர்த்தர் (மத்வாசார்) பாஷ்யமியற்றினார். நமது விசிஷ்டாத்வைத மதத்திற்காக பகவத் ராமாநுஜாசார்யரென்கிற ஸ்வாமி யெம்பெருமானார் ஸ்ரீ பாஷ்யமருளிச் செய்தார்.

15. இதர பாஷ்யங்களையும்பற்றி

வட இந்தியாவில் அதிக ப்ரஸித்தி பெற்றுள்ள வல்லப மதம் நிம்பார்க்க மதம் முதலிய மதங்களுக்காகவும் பாஷ்யங்கள் தோன்றியுள்ளன. சைவ மதத்திற் காக நீலகண்ட பாஷ்யம் தோன்றியுள்ளது. இப்படி மற்றும் பல பாஷ்யங்களிருந் தாலும் மதத்ரய பாஷ்யமென்று மூன்று பாஷ்யங்களே நமது நாட்டில் குலாவப்படு கின்றன. ஸ்ரீவைஷ்ணவர்களென்றும் விசிஷ்டாத்வைதிகளென்றும் பகவத் ராமா நுஜ தர்சநஸ்தர்களென்றும் வழங்கப்படுகின்ற நமக்கு ஸ்வாமியின் ஸ்ரீபாஷ்யமே ஜீவாதுவாகும். சங்கரபாஷ்யம் மத்வபாஷ்யம் நீலகண்டபாஷ்யம் என்பவை போலல்லாமல் ஸ்ரீபாஷ்யமென்றே தோன்றியுள்ள ப்ரஸித்தி இதன் ஒப்பற்ற பெரு மையைப் புலப்படுத்தும்.

16. ஸ்ரீபாஷ்யத்தின் பெருமை விளக்கம்.

உபநிஷத்துக்களின் உண்மைப் பொருள் ஸூத்ரகாரருடைய உள்ளத்திற்கு ஒத்ததாக நிஷ்பக்ஷபாதமாய் நிருபிக்கப்பட்டது ஸ்ரீபாஷ்யமேயென்று மேனாட்டுப் புலவர்களும் மெச்சியுள்ளார்கள். அது நிற்க: ஸ்வாமி ஸ்ரீபாஷ்யமருளிச் செய்யத் தொடங்கும்போதே "பகவத்போதாயநக்ருதாம் விஸ்தீர்ணாம் ப்ரஹ்ம ஸூத்ர வ்ருத்திம் பூர்வாசார்யாஸ்ஸஞ்சிக்ஷிபு: ; தந்மதாநுஸாரேண ஸூத்ராக்ஷராணி வ்யாக்க்யாஸ்யந்தே [முன்னோர் மொழிந்தமுறை தப்பாமே வியாக்கியானிப்போம்] என்று அருளிச்செய்திருப்பதனால் ஸ்ரீபாஷ்யத்தின் ப்ராமாணிகத்வம் அசைக்க முடி

யாது விளங்குகின்றது. இக்காலத்து அஸூயுக்கள் சிலர் மேலே உதாஹரித்த பங்க்தியின்மேல் வீணான விவாதத்தைக் கிளப்பி பங்கமடைந்துபோனார்களென்பது நம்முடைய சததூஷணீவஜ்ரகுடார — தத்விஜயத்வஜ — சாங்கரசிரோபூஷா — தத்தூஷணோதிக்ரந்தங்களினால் விசதமாதலால் அதனை ஈண்டு விவரித்துரைக்கின்றிலோம். ஆர்ஷவ்யாக்யாநகவசிதமாயும் அதிப்ராசீநமாயும் பரம பவித்ரமாயுமுள்ளது விசிஷ்டாத்வைதமேயென்றும், அதை நிலைநாட்டவல்ல பாஷ்யம் ஸ்ரீபாஷ்யமேயென்றும் ப்ராமாணிக வைதிகோத்தமர்களின் கொள்கை.

17. விசிஷ்டாத்வைத சப்தார்த்த விவரணம்.

விசிஷ்டாத்வைத ஸித்தாந்தமென்னுஞ் சொல்லுக்குப் பொருள் விவரிக்கப்படுகிறது. ஸித்தாந்தமென்பதற்கு ப்ராமாணிகமாகப் பரிக்ரஹிக்கப்பட்ட அர்த்தமென்று தேர்ந்த பொருள். மதம் என்றவாறு. இரண்டாயிருக்கும் தன்மை (த்விதா) எனப்படும். த்வைதமென்றாலும் அதுவே பொருள். பேதம் என்றதாயிற்று. அத்தோடு நஞ் சேர்ந்தால் அத்வைதம் என்கிறது. அபேதமென்று பொருள். விசிஷ்டஸ்ய அத்வைதம் — விசிஷ்டாத்வைதம். ஸமஸ்த சேதநாசேதந வஸ்துக்களோடு கூடின ப்ரஹ்மம் ஒன்று என்று அங்கீகரிக்கப்படுவதால் இந்த தரிசனம் விசிஷ்டாத்வைதமெனப்படுகிறது. சித்தும் அசித்துமாகிய இரண்டு தத்துவங்கள் உண்மையில் கிடையவே கிடையாதென்றும் ப்ரஹ்மமொன்றே உள்ளதென்றும் கொள்ளுகின்ற பிறருடைய மதத்தைத் தள்ளி, மூன்று தத்துவங்களும் உண்மையாகவுள்ளனவென்று கொள்ளுவதே இந்த தரிசனத்தில் ஸாரமானது. இது பலபடியாக இதில் உபபாதிக்கப்படும்.

18. விசிஷ்டாத்வைதமென்பதற்கு வேறு விதமான பொருளின் பொருந்தாமை.

'விசிஷ்டஸ்ய அத்வைதம் — விசிஷ்டாத்வைதம்' என்ற கொள்ளுகையன்றிக்கே, 'விசிஷ்டம் ச விசிஷ்டம் ச விசிஷ்டே; விசிஷ்டயோ: அத்வைதம் — விசிஷ்டாத்வைதம்' என்று கொண்டு ஸூக்ஷ்மசிதசித் விசிஷ்ட ப்ரஹ்மத்திற்கும் ஸ்தூல சிதசித்விசிஷ்ட ப்ரஹ்மத்திற்கும் ஐக்யம் கொள்ளுகை விசிஷ்டாத்வைதம் என்பாருமுளர். இதில் உபபத்திகாண்பதரிது. விசிஷ்டஸ்ய அத்வைதமென்பதே உபபந்நமாகும். 'ப்ரஹ்மமொன்றே ஸத்யமானது; மற்றவையெல்லாம் மித்யை' என்று சொல்லுகிற அத்வைதிகள் ப்ரஹ்மத்தினிடத்தில் சிதசித் விசிஷ்டாத்வத்தை ஒப்புக்கொள்ளுவதில்லை. ப்ரஹ்மம் போலவே ஜகத்தும் ஸத்யமேயென்று அங்கீகரிக்கிற த்வைதிகளும் [மாத்வர்களும்] சேதநாசேதனங்களுக்கும் ப்ரஹ்மத்திற்கும் ரக்ஷ்யரக்ஷகபாவ ரூபமான ஸம்பந்தம் தவிர ஐக்யவ்யபதேசத்திற்குரிய ஸம்பந்த விசேஷமொன்றும் அங்கீகரிக்கின்றிலர். ஆகவே அவர்களும் ப்ரஹ்மத்தினிடத்தில் சிதசித்வைசிஷ்ட்யத்தை ஏற்றுக்கொள்வதில்லையென்பது தேறிற்று.

19. நமது கொள்கையின் சுருக்கம்.

நமது ஸித்தாந்தத்திலோவென்னில், சேதநாசேதநாத்மகமான ப்ரபஞ்சத்தையும் ப்ரஹ்மத்தையும் ஸத்யமென்று கொள்வதோடு அவற்றுக்கு ஐக்யவ்யபதேசத்தை நிர்வஹிக்கக் கூடியதான சரீர சரீரிபாவ ரூபமான ஸம்பந்த விசேஷத்தை

யும் கொள்வதனுலே, உலகத்தில் உடலுக்கும் உயிருக்கும் வேற்றுமை அபலபிக்க முடியாததாயிருக்கச் செய்தேயும் "சைத்ர: ஏக;" என்கிற வியவஹாரம் எப்படி காணப்படுகிறதோ அப்படியே இங்கும் சேதநாசேதந சரீரகமான ப்ரஹ்மத்திற்கு ஏகத்வேந வ்யபதேசமும் பரஸ்பரம் ஸ்வரூப பேதமும் பொருந்தக் குறையில்லே. இவ்வர்த்த தத்துவத்தைக் காட்டவல்லதான 'விசிஷ்டஸ்ய அத்வைதம்-விசிஷ்டாத்வைதம்' என்னும் வ்யுத்பத்தியே யுக்தமானதென்று கொள்க.

20. வேதவாக்யங்களில் விரோதம் காட்டுதல்.

ச்ருதிவாக்யங்களே யுற்று நோக்கினுல் அவற்றில் இருவகையான பாகுபாடு காணப்படும். (1) பேதத்தையே காட்டும் சில வாக்யங்கள். (2) அபேதத்தையே காட்டும் சில வாக்யங்கள். "க்ஷரம் ப்ரதாநம் அம்ருதாக்ஷரம் ஹர; க்ஷராத்மாநா விசதே தேவ ஏக:" என்பது முதலான ச்ருதி வாக்யங்கள் சேதந - அசேதந - ஈச்வர ரூப தத்வத்ரயத்தின் உண்மையைத் தெரிவிக்கும் முகத்தால் பேதத்தைக் காட்டுகின்றன. "நேஹ நாநாஸ்தி கிஞ்சந" "ஸர்வம் கலீவிதம் ப்ரஹ்ம" "தத் த்வமஸி" இத்யாதிகளான ச்ருதி வாக்யங்கள் பலவகைப்பட்ட வஸ்துக்களில்லாமையைத் தெரிவிக்கும் முகத்தால் அபேதத்தைக் காட்டுகின்றன. ஆக, ச்ருதிகளில் சிலவிடத்து பேதப்ரதிபாதநமும் சிலவிடத்து அபேதப்ரதி பாதநமுமிருப்பதாகத் தேறுகையாலே பரஸ்பர விரோதம் ஸ்பஷ்டமாகிறது.

21. காட்டின விரோதத்தைப் பிறர் பரிஹரியாதது.

விருத்தமான அர்த்தத்தைத் தெரிவிக்கையாகிற அவத்யம் ச்ருதிகளில் இடம் பெறத்தகாது. விரோதமோ உள்ளதென்று காட்டியாயிற்று. விரோதத்தைப் போக்கி ஸமந்வயம் காட்ட வேண்டிய பொறுப்பு விமர்சகுசலர்களான வைதிகர்களுக்குள்ளது. ப்ரஹ்மமொன்றுதான் ஸத்யமென்றுகொள்ளுகிற அத்வைதிகள் அபேதத்தைக் காட்டும் ச்ருதி வாக்யங்களே மட்டும் முக்கியமாகப் பரிக்ரஹித்து பேதத்தைக்காட்டும் ச்ருதிவாக்யங்களே உபேக்ஷித்துவிட்டார்கள். த்வைதிகளோவென்னில் பேதத்தைக் காட்டும் ச்ருதிவாக்யங்களே மட்டும் முக்யமாகப் பரிக்ரஹித்து அபேதத்தைக் காட்டும் ச்ருதி வாக்யங்களே உபேக்ஷித்துவிட்டார்கள்.

22. அதனே நன்கு மூதலித்தல்.

"பஸ்யாதமா சரீரம், யஸ்ய ப்ருதிவீ சரீரம். ய ஆத்மநி திஷ்டந்" இத்யாதி வாக்யங்கள் பகவான் ப்ருதிவி முதல் ஆத்மா வரையிலுமுள்ள ஸகல வஸ்துக்களிலும் அந்தர்யாமியாயிருக்கிருனென்பதை ப்ரதிபாதிக்கின்றன; இவற்றை த்வைதிகளும் அத்வைதிகளுமான இரு வகுப்பினரும் அறவே விட்டிட்டார்கள். ஸுபாலோபநிஷத்து முதலான, அந்தர்யாமி ப்ராஹ்மணவாக்யங்களுக்கு உபயமதத்திலும் ஆதரவு கிடையாதென்பது ஸ்பஷ்டம். ஆக, த்வைதாத்வைத மதங்களிரண்டிலும் அநேக ச்ருதி வாக்யங்களே அமுக்க்யார்த்தங்களாகக் கொள்ளுதல் உபேக்ஷித்தல் இத்யாதியான பலீயஸ்ஸான தோஷமுள்ளது, இத்தகைய தோஷம் சிறிதும் இடம் பெருதது நமது மதமென்னுமிடம் அடுத்தபடியாக விவரிக்கப்படுகின்றது.

23. நம்மவர்களின் நிர்வாஹத்தின் நேர்மை.

கீழே யெடுத்துக்காட்டிய மூன்று வகுப்பான ச்ருதிவாக்யங்களையும் ஒரு நிகராக ஆதரிப்பவர்கள் விசிஷ்டாத்வைதிகளேயாவர். ஒரு ச்ருதிவாக்யத்திலும் அமுக்யார்த்த கல்பனை யென்பது கிடையாது. எங்ஙனே யென்னில், கடைசியாக எடுத்துக்காட்டப்பட்ட 'யஸ்யாத்மா சரீரமித்யாதிகளான ச்ருதி வாக்யங்களுக்கு கடக ச்ருதிகளென்றும் பெயர். பேதத்தையும் அபேதத்தையும் விரோத லேசமுமின்றிக்கே பொருந்தச் செய்ய வல்லவை அந்தர்யாமி ப்ராஹ்மண வாக்யங்கள்-என்கிற காரணத்தினால் இவற்றுக்கு கடகச்ருதிகளென்னும் பெயர் மிகப் பொருத்தமானது. என்பதை விசேஷித்து உணரவேணும்.

24. நம்மவர்களது நிரூபணத்தின் விளக்கம்.

"நேஹ நாநாஸ்தி கிஞ்சந" இத்யாதிகளான அத்வைத (அபேத) ச்ருதிகளினாலேற்பட்ட அபேதத்தையும் "க்ஷரம் ப்ரதாநமம்ருதாக்ஷரம் ஹர:" இத்யாதிகளான த்வைத (பேத) ச்ருதிகளினாலேற்பட்ட பேதத்தையும் பொருந்தவிடும் வழி கேண்மின். சேதநா சேதந ஈச்வரர்களான மூன்று தத்துவப் பொருள்களின் ஸ்வரூப பேதம் உண்மையாதலால் "க்ஷரம் ப்ரதாந மித்யாதி பேத ச்ருதியானது பேதத்தைச் சொல்லி யிருப்பது பாங்கே; ப்ரஹ்மம் சேதநாசேதந விசிஷ்டமாய்க் கொண்டு ஒன்றேயாகிறபடியால் "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம" இத்யாதியான அபேத ச்ருதிகளும் பொருந்தக் குறையில்லை. "யஸ்யாத்மா சரீர:மித்யாதி அந்தர்யாமி ப்ராஹ்மண ச்ருதிகளானவை ஸர்வேச்வரனே ஸர்வாந்தர்யாமியென்று தெரிவிக்கும் முகத்தால் பேதத்தையும் அபேதத்தையும் பொருந்த விடுகின்றன என்பது நம் ஆசாரியர்களின் நிரூபணம்.

25. ஒருமையும் பன்மையும் பொருந்தும் வழி.

சிதசிதீச்வரர்களாகிற மூன்று தத்துவங்களிலும் தனிப்படக் கண் செலுத்தினால் பேதம் க்ரஹிக்கப்படுகிறது அசேதநமாகிய சரீரம் வேறு; அதனுள்ளுறையும் சேதநன் வேறு; அவனுக்கும் அந்தர்யாமியான பரமாத்மா வேறு என்று பேதப்ரதிபத்தி சாஸ்த்ர ஸம்மதமேயாகும். பல அவயவங்களின் கூட்டரவான சரீரத்திலே கை, கால், காது, மூக்கு முதலானவற்றைத் தனியே பார்க்குமிடத்து பேத ப்ரதிபத்தியும் 'அவயவஸங்காதம் ஒன்று' என்று பார்க்குமிடத்து அபேத ப்ரதிபத்தியும் பொருந்துகின்றது. தேவதத்தன் ஒருவன், யஜ்ஞதத்தன் ஒருவன் இத்யாதி வ்யவஹாரங்களில் தேவதத்தனுக்கும் யஜ்ஞதத்தனுக்கும் ஒருமை எங்ஙனம்? என்று விமர்சிக்கவேணும். 'தேவதத்த: க்ருச:, யஜ்ஞதத்த: ஸ்தூல:' இத்யாதிவ்யவஹாரங்களில் க்ருசத்வமும் ஸ்தூலத்வமும் சரீர தர்மமாகையாலே தேவதத்த யஜ்ஞதத்த சப்தங்கள் சரீர பரங்களேயென்று அறுதியிடப்படுகிறது. 'தேவதத்தோ மேதாவீ, யஜ்ஞதத்த: ப்ரதிபாவாந்' இத்யாதி வ்யவஹாரங்களில் மேதையும் ப்ரதிபையும் ஆத்ம தர்மமாகையாலே அந்த தேவதத்த யஜ்ஞதத்த சப்தங்களே ஆத்ம பரங்களென்று நிர்ணயிக்கப்படுகிறது. ஆத்மாவும் சரீரமும் ஒன்றல்ல; வெவ்வேறுபட்டவை. ஆக அனேக வஸ்துக்களிருக்கச் செய்தேயும் ஏகத்வவ்யவ

ஹாரம் நிகழ்ந்து வருவது 'சரீர விசிஷ்டனுன சரீரி ஒருவன்' என்னுமபிஸந்தியால தனே யன்றோ. இதைத் திடமாக நெஞ்சில் கொள்க.

26. ப்ரக்ருதத்தில் ஸமந்வயம்.

இவ்வண்ணமாகவே 'ப்ரஹ்ம ஏகமேவ' என்ற ச்ருதியும் விசிஷ்டைக்யத்தைச் சொல்லுவதாகக் கொள்ளக் குறையில்லையே. ஏவஞ்ச பேதத்திற்கும், அபேதத்திற்கும் அபாயமொன்றுமில்லையென்றதாயிற்று. சரீரங்களும் சரீரிகளுமாகிற நாநா வஸ்துஸத்பாவம் ப்ராமாணிக மாகையாலே அபலபிக்க வொண்ணாததே இங்ஙனே விசிஷ்டைக்யமும் அநுபவஸித்தமாகையாலே அபலபிக்க வொண்ணாததே. ஆக, உண்மையில் வெவ்வேறுபட்ட வஸ்துக்களும் சரீர சரீரி பாவநிபந்தநமாகவே ஒன்றாக வழங்கப்படுவதாய் ஸித்திக்கையாலே அப்படிப்பட்ட சரீர சரீரி பாவத்தை யுணர்த்துகின்ற அந்தர்யாமி ப்ராஹ்மணாதி ரூபங்களான ச்ருதி வாக்யங்களுக்கு நமது மதத்தில் இருந்த கௌரவமுள்ளது. அத்வைதிகள் பேதச்ருதிகளை அநாதரிப்பது போலவும், த்வைதிகள் அபேத ச்ருதிகளை அநாதரிப்பதுபோலவும் நாம் ஒரு வகையான ச்ருதியிலும் அநாதரம் காட்டுகின்றிலோம். ஆகவே ஸர்வச்ருதி ஸாமரஸ்யம் நமக்கே யொழியப் பிறர்க்கில்லையென்பது கல்வெட்டாகத் தேறிநின்றது.

27. சரீராத்ம பாவமே ப்ரதாநப்ரதிதந்த்ரார்த்த மென்பது.

மதாந்தரஸ்தர்கள் ஒப்புக்கொள்ளாத பல அர்த்தங்களை நாம் ஒப்புக்கொண்டிருக்கின்றோம். நித்யஸூரிஸத்பாவம், எம்பெருமானுடைய கல்யாண குணாச்ரயத்வம், திவ்யமங்கள விக்ரஹ விசிஷ்டத்வம் முதலானவை அவை. இவற்றையெல்லாம் விட்டு சரீர சரீரிபாவத்தையே கொண்டு விசிஷ்டாத்வைதமென்று பெயரிடுவதில் என்ன விசேஷமென்னில், கேண்மின். ஸித்தாந்தத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்ற அர்த்த விசேஷங்களுள் ஜகச்சரீரகத்வ மென்பதே ப்ரதானமானது. ஆனது பற்றியே இது ப்ரதாந ப்ரதிதந்த்ரார்த்த மெனப்படுகிறது. இதுவே ப்ர தா ந மென்பது எங்ஙனமென்னில் ஸாவச்ருதிகளினுடையவும் முக்கியமான அர்த்தத்தைத் தெரிவிப்பதாய், ஸர்வச்ருதிகளுக்கும் ஸாமரஸ்யத்தை நிர்வஹித்து வாதி விஜய ப்ரயோஜகமாயிருப்பதனாலே, இதற்கு ப்ராதாந்ய மென்றுணர்க. இந்த சரீராத்ம பாவத்தைத் தெரிந்து கொள்ளாமையினாலன்றோ பிறமதத்தவர்கள் ஸர்வ ச்ருதிஸாமரஸ்யத்தை நிர்வஹிக்க மாட்டாமல் தளருகின்றார்கள். குத்ருஷ்டிகளின் குசோத்யங்களை அவலீலயா பரிஹரித்துத் தருவது இந்த சரீராத்மபாவமே யென்க. இங்கு "யத்யேதம் யதிஸார்வபௌமகதிதம்" இத்யாதியான வேதாந்தாசார்யச்லோக ரத்நத்தைத் திடமாகக்கொள்க. இந்த ப்ரதாந ப்ரதிதந்த்ரார்த்தத்தை நன்கு தெரிந்துகொண்ட வொருவ்யக்தியினிடத்தில் விமதர்கள் எத்தனை பேர்கள் கூடி எவ்வளவு வாத கோலாஹலங்களைச் செய்தாலும் அவர்களுக்கு பங்கமேதவிர வேறில்லை யென்பது இதன் கருத்து.

28. சரீராத்மபாவம் ஸூத்ரகாராபிமதமென்று விவரித்தல்.

ஸித்தாந்தத்தில் சரீராத்மபாவமே ப்ரதான மென்பது கீழே உபபாதிக்கப்பட்டது. ப்ரஹ்மஸூத்ரகாரருக்கு இதுவே அபிமதமென்பதை மூதலித்து

இந்த சர்ச்சை ஒருவாறு முடிக்கப்படுகிறது. இவ்விஷயத்தில் சாரீரக மீமாம்ஸை முழுவதுமே பிரமாணமாகக் காட்டக்கூடியதாயினும் வ்யுத்பித்ஸுக்களின் புத்தியில் ஏறுவதற்காக ஸம்க்ஷேபமாய் நிருபித்தல் நலமென்று கருதி அந்த சாரீரக மீமாம்ஸையில் ஒரு அதிகரணத்தை மட்டும் ஈண்டெடுத்துக் காட்டிப் பிராமாணிகர்களின் மனத்தில் பதியவைக்கிறோம்.

29. வாக்யாந்வயாதிகரண நிர்ணயம்

அதில் முதலத்யாயம் நான்காவது பாதத்தில் வாக்யாந்வயாதிகரண மென்பது ப்ரஸித்தமானது. நான்கு ஸூத்ரங்கள் கொண்டது இவ்வதிகரணம். ப்ருஹதாரண்யகோபநிஷத்தில் ப்ரஸித்தமான மைத்ரேயீ ப்ராஹ்மணமென்னும் பகுதியில் அம்ருதத்வோபாயமேதென்று கேட்ட மைத்ரேயியைக் குறித்து யாஜ்ஞவல்க்யருடைய விடை: "ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ச்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:" என்பது. இதில் ஆத்மா என்னும் சப்தத்தால் குறிக்கப்பட்டவன் பரமாத்மாவா ? ஜீவாத்மாவா ? என்று விசாரம் ப்ரஸக்தமாக, பரமாத்மாவே யென்று நிர்ணயம் செய்தாகிறது. இது "வாக்யாந்வயாத்" என்கிற முதல் ஸூத்ரத்தினால் தேறியது. மைத்ரேயீப்ராஹ்மணத்திலுள்ள மஹாவாக்யம் ஸமஞ்ஜஸமாக அந்வயிக்க வேண்டுகையாலே அந்த வாக்யத்தில் பிரதிபாதிக்கப்பட்ட ஆத்மா கருமபலனை யநுபவிப்பவனான ஜீவாத்மாவாக இருக்கமுடியாது, பரம புருஷனேயாகவடுக்கும் என்று சொல்லப்பட்டதாயிற்று.

30. இங்கு சங்காபரிஹாரங்கள்.

இதற்குமேல் ஒரு கேள்வி எழுந்தது. அதாவது, இங்குப் பரமாத்மா விவக்ஷிதனாகில் ஜீவாத்மவாசகமான ஆத்மா என்கிற சொல்லையிட்டுச் சொல்லுவானேன் ? பரமாத்மாவென்றே பிரயோகிக்கலாகாதா ? என்று. இக்கேள்விக்கு ஸூத்ரகாரரான வியாஸரால் மேலே மூன்று ஸூத்ரங்களினால் வெவ்வேறுவிதமான ஸமாதானங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அடைவே ஆச்மரத்ய மதம், ஔடுலோமிமதம், காசக்ருத்ஸ்ந மதம் என மூவருடைய மதம் காட்டப்பட்டுள்ளது. முறையே ஸூத்ரங்கள் காண்மின் ;—

(1) ப்ரதிஜ்ஞாஸித்தேர் லிங்கமாச்மரத்ய:

(2) உத்க்ரமிஷ்யத ஏவம்பாவாதித்யௌடுலோமி:

(3) அவஸ்திதேரிதி காசக்ருத்ஸ்ந:

என்கிற இம்மூன்று ஸூத்ரங்களும் மூன்று மஹர்ஷிகளின் நிர்வாஹங்களைத் தெரிவிப்பனவாம். இவற்றை அடைவே சிறிது விவரிக்கிறோம்.

31. ஆச்மரத்ய மதம்.

ஜீவாத்ம பரமாத்மாக்களுக்கு கார்ய காரண பாவம் சுருதியில் சொல்லப்பட்டிருக்கையாலே அதனால் அவர்களுக்கு அபேதம் ஏற்படுகிறது. காரணமான மண்ணுக்கும் அதன் கார்யமான பானைக்கும் அபேதம் காண்கிறதன்றோ. ஆக இவ்வபேதத்தைத் தெரிவிப்பதற்காக பரமாத்ம ஜீவாத்மாக்களுக்கு ஐக்யோக்தியுள்ளதென்றார் ஆச்மரத்யர்.

3

32. இனி ஔடுலோமி மதம்.

இமே காட்டிய ஆச்மரத்ய மதத்தில் ஜீவாத்மாவுக்குப் பரமாத்மாவினிடத்திலிருந்து உத்பத்தியைக் கொள்ளுகையாலே "ந ஜாயதே ம்ரியதே வா விபச்சித்" இத்யாதி ப்ரமாணங்களோடு அது விரோதிக்கையாலும் மற்றும் அநேக தோஷப்ரஸங்கத்தாலும் ஆச்மரத்ய மதம் ஸாதுவன்றென்று கொண்ட ஔடுலோமியானவர்—முக்தி தசையில் ஜீவாத்மாவுக்குப் பரமாத்மாவோடு அபேதம் ச்ருதி ஸித்தமாயிருக்கையாலே முக்தி தசையில் பவிஷ்யத்தான ஜீவாத்ம பரமாத்ம அபேதத்தை யவலம்பித்து ஐக்யம் சொல்லிற்றாக நிர்வஹித்தார்.

33. காசக்ருத்ஸ்ந மதம்.

இமே விவரித்த ஔடுலோமி மதத்தில் மோக்ஷம் வரையில் ஜீவாத்மபரமாத்மாக்களுக்கு பேதமுள்ளதென்றும், முக்தி தசையில் அபேதமென்றும் கொள்ளப்படுகிற விது, "பரமாத்மாத்மநோர்யோக: பரமார்த்த இதீஷ்யதே, மித்த்யைதத் அந்யத் த்ரவ்யம் ஹி நைதி தத்த்ரவ்யதாம் யத:" என்கிற ஸ்ரீ விஷ்ணுபுராண வசன விருத்தம். வெவ்வேறுபட்ட பொருள்கள் ஒன்றோடொன்று, சேருமேயொழிய ஐக்கியத்தை யடையமாட்டாவென்று இதில் ஸ்பஷ்டமாகக் கூறியிருக்கின்றதன்றோ. முக்தி தசையில் ஜீவாத்மாவுக்கு அபஹதபாப்மத்வாதி ஸ்வரூபம் ஆவிர்ப்பவிக்குமதொழிய பரமாத்மாவோடு ஐக்யாபத்தியென்பதில்லை யென்னுமிடம் (4-4-1.) ஸம்பத்யாவிர்ப்பாவாதிகரணத்தில் நிர்ணயிக்கப் பட்டுள்ளது. ஆக இத்தனைக்கும் மூலமாக நிர்வஹிப்பது அநுசிதம் என்று கொண்ட காசக்ருத்ஸ்நர்-பரமாத்மா ஜீவாத்மாவினுள் அந்தராத்மாவாக இருப்பதும், ஜீவாத்மாவுக்குப் பரமாத்ம சரீரத்வமும் "ய ஆத்மநி திஷ்டந்...யஸ்யாத்மா சரீரம்" இத்யாதி ச்ருதிஸித்தமாகையாலும், சரீர வாசகங்களான சப்தங்களுக்கு சரீரி பர்யந்த வாசகத்வம் ஆக்ருத்யதிகரண ஸித்தமாகையாலும் ப்ரக்ருதத்தில் ஜீவாத்மவாசியான ஆத்ம சப்தத்தைப் பரமாத்ம பர்யந்த வாசகமாக நிர்வஹிப்பதுதான் உசிதமென்று கருதினர்.

34. காசக்ருத்ஸ்நமதமே யுக்தமானது.

இங்ஙனே வரிசையாக மூன்று மதங்களை உதாஹரித்த ஸூத்ரகாரர் மேலே நான்காவது மதத்தைச் சொல்லாமையினால் காசக்ருத்ஸ்ந மதமே ஸூத்ரகாராபிமதமென்று நிஸ்ஸந்தேஹமாக நிர்ணயிக்கப்படுகிறது. இது விசிஷ்டாத்வைத மதத்திற்கு விஜயத்வஜமானது.

35. காசக்ருத்ஸ்நமதத்தைப் பிறர் தவறாக நிரூபித்தல்.

இங்கே அத்வைதிகள் சொல்லுவதென்னவென்றால், காசக்ருத்ஸ்நமதந்தான் ஸூத்ரகாராபிமதமென்பது எமக்கும் ஸம்மதம். ஆனால் (அவஸ்திதே:) என்பதற்கு—'பரமாத்மாவானவர் ஜீவாத்மாவினிடத்தில் அந்தர்யாமியாயிருப்பதனாலே' என்று நீங்கள் கூறுகின்ற பொருள் ஸாதுவன்று. 'பரமாத்மா தானே ஜீவாத்மாவாக இருப்பதனாலே' என்கிற பொருள்தான் அவஸ்திதே: என்பதற்கு ஸமஞ்ஜஸமாகும். ப்ரக்ருதத்தில் ஐக்யத்தைப் பொருந்தவிடவேண்டியது ப்ரதானம்.

இங்ஙனே பொருள் கூறினாலும் ஐக்யம் பொருந்திவிடுகின்றதன்றோ. காசக்ருத்ஸ்நர் சரீராத்மபாவத்தை அவலம்பித்தே ஐக்யத்தைப் பொருந்தவிட்டாரென்று ஏதுக்குச் சொல்லவேண்டும்? என்கிறார்கள் அத்வைதிகள். இது ஸமஞ்ஜஸமான வாதமன்று என்பதை இதோ நன்கு நிரூபிக்கிறோம்.

36. காசக்ருத்ஸ்ந மதத்திருண்மை விளக்கம்.

"அத்தா சராசரக்ரஹணாத்" என்கிற உபக்ரமஸூத்ரத்தைக் கொண்ட அத்த்ரதிகரணத்தில் "குஹாம் ப்ரவிஷ்டாவாத்மாநௌ ஹி தத்தர்சநாசத்" என்கிற ஸூத்ரத்தில் த்விவசநாந்தமான ஆத்மாநௌ என்கிற சப்தத்தினால் பரஸ்பரபிந்ந ஸ்வரூபசாலிகளான ஜீவாத்ம பரமாத்மாக்களுக்கு இருவருடைய குஹாப்ரவேசம் ச்ருதி ஸித்தமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் ஜீவப்ரஹ்மங்களுக்கு நிருபாதிகமான பேதமே ச்ருதிக்கு அபிமதமென்று ஸூத்ரகாரர் அபிப்ராயப்பட்டிருப்பது ஸ்பஷ்டமாகத் தெரியவருகிறது. ஆக ஜீவப்ரஹ்மங்களுக்கு ச்ருத்யபிமதமான ஸ்வரூப பேதம் பழுதுபடாதபடி நிர்வஹிப்பதுதான் ஸூத்ரகாரர்க்கு அபிமதமென்று இசைந்து இரவேணும். ஏவஞ்ச, ஜீவப்ரஹ்மங்களுக்கு ஸ்வரூபைக்யத்தை யவலம்பித்து நிர்வஹிக்க வந்தது "அவஸ்திதேரிதி காசக்ருத்ஸ்ந:" என்கிற ஸூத்ரமென்று சொல்லுவது பொருந்த மாட்டாது.

37. முக்கியமாக நோக்கத்தக்க விஷயம்.

அவஸ்திதி: என்கிற சப்தமானது "பூதலே கட: அவஸ்திஷ்டதே, ப்ராஸாதே தேவதத்த: அவதிஷ்டதே" இத்யாதி வ்யவஹாரங்களிற்போல ஒரு வஸ்துவில் மற்றொரு வஸ்து இருப்பதைத்தான் சொல்லக்கடவது; ப்ருதிவ்யாம் திஷ்டந் அப்ஸு திஷ்டந் தேஜஸி திஷ்டந் வாயௌ திஷ்டந் ஆகாசே திஷ்டந் ஆத்மநி திஷ்டன், இத்யாதிகளான உபநிஷத் வாக்யங்களில் பலகால் காணப்படுகிற ஸ்தாதாது ப்ரயோகத்தை அடியொற்றியே அவஸ்திதே: என்கிற ஸூத்ர ப்ரயோகமுள்ளதென்பதை ப்ராமாணிகர்களின் உள்ளம் அநாயாஸமாக க்ரஹிக்கும். ஆக காசக்ருத்ஸ்ந மதம் அத்வைதிகள் கூறுகிறபடி பொருந்தாது. ஏவஞ்ச, வாக்யாந்வயாதிகரணத்தில் விசிஷ்டாத்வைதமே ஸித்தாந்திக்கப்பட்டதென்று தெளிவாயிற்று.

38. நாராயண பாரம்பர்ய ப்ரதிபாதந-உபக்ரமம்

ஆக இதுகாறும் சாரீரக மீமாம்ஸா சாஸ்த்ரத்திற்கு அத்வைதத்தில் நோக்கில்லை யென்பதும் அத்வைத கண்டனத்தில்தான் முழு நோக்கு என்பதும் ப்ரஹ்ம ஸூத்ரங்களைக் கொண்டே நிரூபிக்கப்பட்டது. இனி அந்த சாரீரக மீமாம்ஸா சாஸ்திரத்திற்கு நாராயண பாரம்யப்ரதிபாதநத்தில்தான் முழு நோக்கென்னுமிடம் மூதலிக்கப்படுகிறது.

39. ஸூத்ரகாரர் அபிப்ராய நிரூபணம்.

ஜகத்காரண வஸ்துவாதிகளான வேதாந்த வாக்யங்களெல்லாம் ஸ்ரீமந் நாராயணனிடத்திலேதான் பர்யவஸிக்கின்றன என்று ஸூத்ரகாரர் தாமே ஸித்தாந்தம் செய்திருக்கிறாரென்பதை நன்கு நிரூபித்துக் காட்டுகிறோம். "அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா" என்று ப்ரஹ்ம விசாரத்தை ப்ரஸ்தாவித்து "ஜந்மாத்யஸ்ய

யத:* என்கிற அடுத்த ஸூத்ரத்தினாலே, 'எந்த வஸ்துவினிடத்தில் நின்றும் ஜகத் ஜந்ம ஸ்திதி லயங்கள் ஆகின்றனவோ அது ப்ரஹ்மம்' என்று ப்ரஹ்ம லக்ஷணம் காட்டினார் வியாஸர். வேதாந்தங்களில் ஜகத்காரண வஸ்துவைத் தெரிவிக்கின்ற வாக்யங்கள் ஒரே விதமாக இல்லை. பரஸ்பர விருத்தங்கள்போல் தோன்ற நின்றன என்பது பிரஸித்தமான விஷயம். ஏதோ ஒரு வஸ்துதான் ஜகத் காரணமாக இருக்க முடியுமே ஒழிய பல வஸ்துக்கள் அப்படியிருக்க முடியாதென்கிற நிச்சயம் ஆவச்யகமானது. பரஸ்பர விருத்தங்கள்போல் தோன்ற நின்ற காரண வாக்யங்களாலே இந்த நிச்சயம் எப்படி உண்டாகுமென்று தோன்றக்கூடிய சங்கையை ஸூத்ரகாரர் பரிஹரித்தேயிருக்கிறார். எப்படி பரிஹரித்திருக்கிறாரென்றால்—

40. பரிஹரித்துள்ள விதம்.

ஸகல காரணவாக்யங்களுக்கும் ஒற்றுமையைக் காட்டிப் பரிஹரித்திருக்கிறார் ஸாகாங்க்ஷ வாக்யங்களுக்கு நிராகாங்க்ஷ வாக்யங்களில் பர்யவஸானம் நியாயமென்பது யாவருமிசைந்ததொன்றும். இதையே நெஞ்சில் கொண்ட வ்யாஸ மஹர்ஷியானவர் ஈக்ஷத்யதிகரணம் முதலானவற்றால் காரண வாக்யங்கள் எல்லாவற்றிற்கும் புருஷஸூக்தப்ரதிபாத்யனான நாராயணனிடத்தில் பர்யவஸாநத்தைக் காட்டியுள்ளார். இதுதன்னை இங்கு விளக்கமாக உபபாதிக்கிறோம்.

41. காரண வாக்யங்களில் ஸாகாங்க்ஷம் நிராகாங்க்ஷம் என்கிற பேதத்தை விவரித்தல்.

ஜகத்காரண வஸ்துவை ப்ரஸ்தாவிக்கின்ற வாக்யங்கள் காரண வாக்யமெனப்படும். அந்த வாக்யங்களை ஸாகாங்க்ஷ வாக்யங்களென்றும், நிராகாங்க்ஷ வாக்யங்களென்றும் இருவகையாகப் பிரித்துக்கொள்ள வேண்டியது முதற் காரியம். ஸாகாங்க்ஷ வாக்யங்களென்பவை தாமும் இரு வகையாயிருக்கும். 1. ஸாமான்ய சப்தத்தோடு கூடியிருந்து விசேஷ ப்ரதிபத்தியை அபேக்ஷித்திருக்குமவை. 2. அநுவாத ரூபமாய்க் கொண்டு புரோவாதத்தை அபேக்ஷித்திருக்குமவை-என்று. *ஸதேவ ஸோம்ய இதமக்ர ஆஸீத் ஏகமேவாத்விதீயம்*, *ஸேயம் தேவதைக்ஷத* இத்யாதி வாக்யங்களில் 'ஸத்' என்றும் 'தேவதா' என்றும் ஸாமான்ய சப்தங்களேயிருக்கையாலே இவை விசேஷ ப்ரதிபத்தி ஸாகாங்க்ஷங்களென்பது ஸ்பஷ்டம். *யதோ வா இமானி பூதானி ஜாயந்தே* இத்யாதி வாக்யங்கள் யச் சப்த கடிதங்களாயிருப்பது பற்றி அநுவாத ரூபங்களாகையாலே புரோவாத ஸாகாங்க்ஷங்களென்பதும் ஸ்பஷ்டம். ஸாகாங்க்ஷ வாக்யங்களில் கீழ்ச்சொன்ன இரண்டு வகைகளைத் தவிர மூன்றாவது வகையும் ஒன்று உண்டு.

42. அர்த்தங்களில் யோக்யதையும் அயோக்யதையும்.

அயோக்யமான அர்த்தத்தைத் தெரிவிக்கும் வாக்யங்கள் யோக்யார்த்த ப்ரதிபத்தி ஸாகாங்க்ஷமாயிருப்பதே அது. ப்ரதர்தநவித்யையில் *மாமுபாஸ்வ ஏததேவாஹம் மநுஷ்யாய ஹிததமம் மந்யே* என்று இந்திரன் சொன்ன வாக்யம் போன்றவை இந்த வகுப்பில் சேரக் கடவன. ஆக மூவகுப்பாகப் பிரியலுற்ற ஸாகாங்க்ஷங்களான காரண வாக்யங்கள் வஸ்து விசேஷத்தை நிர்ணயிப்பதில் ஸ்வதந்திரமாக அசக்தங்களாகையாலே நிராகாங்க்ஷங்களான வாக்ய விசேஷங்களைக் கொண்டே வஸ்து விசேஷத்தை நிர்ணயிக்க வேண்டியதாகிறது. யோக்

யார்த்த விசேஷ ப்ரதிபாதகங்களாய்க் கொண்டு இதர வாக்யங்களை எதிர்பாராதவையான வாக்யங்களே நிராகாங்க்ஷ வாக்யங்க ளென்று தேறிற்று.

43. "ஏகோஹ வை நாராயண ஆஸீத்"

"ஏகோ ஹ வை நாராயண ஆஸித் ந ப்ரஹ்மா நேசாந:" இத்யாதி வாக்யங்களே அப்படிப்பட்டவை என்று ஸாரஜ்ஞர்கள் நிஷ்கர்ஷித்துள்ளார்கள். மேலே காட்டிய வாக்ய விசேஷத்தில் ஸாமாந்ய சப்தம் சேர்ந்திருக்கவில்லை. அநுவாத ரூபத்வமுமில்லை; அயோக்யரார்த்த ப்ரதிபாதநமுமில்லை. ஸத், ப்ரஹ்ம, ஆத்ம, தேவதா இத்யாதிகளான பதங்களிருந்தாலன்றோ ஸாமாந்ய சப்தம் சேர்ந்திருப்பதாக ஆகும். அவை இல்லையே. யச்சப்த கடிதமாயிருந்தாலன்றோ அநுவாத ரூபமாக ஆகும். அதுவுமில்லையே. அயோக்யார்த்த ப்ரதிபாதகத்வமில்லாமையோடு கூடின யோக்யார்த்த ப்ரபாதகத்வமே யுள்ள தென்பது நிரூபிக்கப் படவேண்டியதாக நிற்கையாலே அது நிரூபிக்கப்படுகிறது அடுத்தபடியாக.

44. ஈக்ஷத்யதிகரணத்திலே நாராயணனுக்கே ஜகத்காரணத்வம் விளக்கப்படுவது.

சாரீக மீமாம்ஸையில் சாஸ்த்ராரம்ப ஸமர்த்தநார்த்தமான சதுஸ்ஸூத்ரி முடிந்ததும் ஐந்தாவது அதிகரணம் ஈக்ஷத்யதிகரணம். இதில் விசேஷித்துக் குறிக்கொள்ளத்தக்க ஸூத்ரங்கள் இரண்டு; 'தந்நிஷ்டஸ்ய மோக்ஷோ பதேசாத்' கதிஸாமாந்யாத்' என்னுமிவை. ஸாதாரணமான ஸச்சப்தத்தையும் தேவதா சப்தத்தையும் கொண்டிருக்கிற ஸத்வித்யையாவது புருஷஸூக்த ப்ரதிபந்நனான ஸ்ரீமந் நாராயணன் பக்கலிலே பர்யவஸிப்பதாக இவ்விரண்டு ஸூத்ரங்களாலும் காட்டப்படுகிறது. "தந்நிஷ்டஸ்ய மோக்ஷோபதேசாத்" என்கிற ஸூத்ரத்தின் பொருளை முன்னம் தெரிந்துகொள்ளவேணும், 'தந்நிஷ்டஸ்ய' என்கிற விடத்துள்ள தானதச்சப்தத்தினால்—ஸூத்ரகாரர் கருதிய விஷய வாக்யத்திலுள்ள ஸச்சப்தவாச்யமான வஸ்து கொள்ளப்படுகிறது. ஆகவே, ஸத்தை உபாஸிப்பவனுக்கு என்பதாகப் பொருள் தேறிற்று. ஸத்தை உபாஸிப்பவனுக்கு முக்தி கிடைப்பதாக ஓதப்படுவதால் ப்ரக்ருத ஸச்சப்த வாச்யமான வஸ்து ப்ரதானமாக மாட்டாது என்றதாக ஸூத்ரார்த்தம் தேறும். 'ப்ரதாநந்தான் ஜகத் காரணம்' என்பவர்களை நிரஸிப்பதன்றோ ப்ரஸ்துதம். புருஷஸூக்தத்திலும் உத்தர நாராயணத்திலும் "தமேவம் வித்வாநம்ருத இஹ பவதி | நாந்ய: பந்தா அயநாய வித்யதே" என்றும், "நாந்ய: பந்தா வித்யதே அயநாய" என்றும் மோக்ஷோபாயமான உபாஸநத்திற்கு இலக்காகுந்தன்மை நாராயணனுக்கே ஓதப்பட்டுள்ளது. இந்த ஸத்வித்யா ப்ரகரணத்திலும் [அதாவது, சாந்தோக்யத்தில்] "ஆசார்யவாந் புருஷோ வேத; தஸ்ய தாவதேவ சிரம் யாவந்ந விமோக்ஷ்யே அத ஸம்பத்ஸ்யே" என்று ஸதுபாஸனமே மோக்ஷோபாயமாகச் சொல்லப்பட்டது. இந்த ச்ருதி வாக்யத்தின் பொருளாவது, எவனுக்கு உபதேஷ்டாவான ஆசார்யன் இருக்கிறானோ அவனே ப்ரஹ்ம வித்தாவான். சரம சரீரத்திலிருந்து விடுபடுமளவே அவனுக்குக் காலதாமதம்; சரம சரீரம் விழுந்தவுடனே ஸச்சப்த நிர்திஷ்டனாய் ஜகத் காரணபூதனான பரம புருஷனை அடைகின்றான். ஸதுபாஸன நிஷ்டனுக்கு சரீரம் விழுமளவு.

தான் மோக்ஷப்ராப்தியில் தாமதம்: சரீரம் தொலைந்தவுடனே முக்தனாகிறான்—என்பதாம். இதனால் நாராயணனே ஸச்சப்த வாச்யனென்று அறுதியிடப்படுவதனால் ப்ரக்ருதமான ஸத்து ப்ரதானமன்று என்றதாக ஸூத்ர தாத்பர்யம் தேறுகிறது. "தமேவம் வித்வாநம்ருத இஹ பவதி" இத்யாதிகளான உதாஹ்ருத வாக்யங்களாலே நாராயணோபாஸனந்தான் மோக்ஷோபாய மென்று நிச்சயிக்கப்பட்ட அளவில் "தந்நிஷ்டஸ்ய மோக்ஷோபதேசாத்" என்று ஸூத்ர மியற்றின மஹர்ஷியானவர் நாராயணோபாஸகனையே விவக்ஷித்தாராகிறார் என்று நிர்ணயிப்பதில் தட்டுண்டோ?

45. "தந்நிஷ்டஸ்யேத்யாதி ஸூத்ரத்தின் விவரணம்.

கீழே நாம் விவரித்த விஷயத்தில் பிறர் சொல்லக்கூடியது ஒன்றுண்டு: அதாவது; தந்நிஷ்டஸ்ய மோக்ஷோபதேச மாகிற ஹேதுவைக் கொண்டு ப்ரதாநம் ஜகத்காரணமன்று என்று நிரஸிப்பது மட்டுமே இங்கு ஸூத்ரகாரருக்கு உத்தேச்யமானது; நாராயணனே ஜகத்காரணபூதனென்று ஸ்தாபிப்பதில் இங்கு நோக்கே கிடையாது. சப்தத்தினால் கிடைப்பதற்கு மேற்படக் கொள்ளத்தகாது என்று.

46. (இதற்கு மறுப்பு) இங்ஙனம் சொல்வது தவறு. இதர ப்ரதிக்ஷேபத்தில் மட்டுமே ஸூத்ர தாத்பர்ய மென்று கொண்டால் ந்யூநதையாகும். இந்த வேதாந்த சாஸ்த்ரம் எதற்காக ஆரம்பிக்கப்பட்ட தென்று பார்க்க வேணும்; முமுக்ஷுவான வனை மோக்ஷோபாய பூதமான வஸ்துவை உபாஸிப்பதில் ப்ரவர்த்திக்கச்செய்வதன் பொருட்டு விசிகித்ஸை பற்ற ப்ரஹ்மஜ்ஞாநோத்பாதநத்தின் பொருட்டு சாஸ்த்ரம் ஆரம்பிக்கப்பட்டது. சாஸ்த்ராரம்பத்திற்குப் பலன் இதுதானென்பதை வேதாந்திகள் யாவரும் ஸமரூபமாக இசைந்தே தீருவர்கள். 'ஜகஜ் ஜந்மாதி காரணம் ப்ரஹ்ம' என்று ப்ரஹ்ம லக்ஷணம் சொல்லி ப்ரதாநாதிகள் ஜகத்காரணமன்று என்று கண்டித்த வளவில் விசிகித்ஸையற்ற ப்ரஹ்மஜ்ஞாநோத்பாதனம் செய்ததாக ஆய்விடுமோ? ஒருநாளுமாகாது. ப்ரஹ்ம ருத்ராதிகளிடையில் எந்த தேவதை ஜகஜ்ஜன்மாதி காரணம்? என்கிற விசிகித்ஸை பரிஹரிக்கப்படாத அளவில் நிஸ்ஸம்சய ப்ரஹ்மஜ்ஞாநோத்பாதநம் செய்யப்பட்டதாக ஆகமாட்டாதென்பதைப் பேதையருமறிவர். ஏவஞ்ச, இன்ன தேவதைதான் ஜகத்காரணமென்று நிஸ்ஸந்தேஹமாகத் தெரிவிக்கப்படாத அளவில் சாஸ்த்ராரம்ப ப்ரயோஜனம் தேறுமையாலே ந்யூநதைக்குப் பரிஹாரமே ஏற்படாது.

47. ஆகவே, ஜகத்காரண பூதப்ரஹ்ம சப்த வாச்யமான தேவதா விசேஷம் இன்னதென்று நிர்த்தாரணம் செய்வதிலும் சாஸ்த்ரம் தத்பரமானது என்று இசைந்து தீர வேண்டும். "தந்நிஷ்டஸ்ய மோக்ஷோபதேசாத்" என்கிற ஹேதூக்தியின் ஸ்வாரஸ்யத்தினாலும் தேவதா விசேஷ நிர்ணயத்தை ஸூத்ரகாரர் செய்யக் கருதியுள்ளாரென்பது செவ்வனே விளங்கா நின்றது; மோக்ஷோபாய பூதமான வஸ்துவுக்கு உபாஸந விஷயத்வம் யாதொன்று இங்குச் சொல்லப்பட்டிரா நின்றதோ இது ப்ரதாநாதி ப்ரதிக்ஷேபக மாத்ரமேயன்று, தேவதா விசேஷ விஷயகத்வத்தை ஸாதிப்பதாகவுமாகின்றது. "தமேவம் வித்வாந் அம்ருத இஹ பவதி" என்கிற ச்ருதி வாக்கியத்திலுள்ளதான தச்சப்தமானது எந்த தேவதா விசேஷத்

தைச் சொல்லுகின்றதோ, அதனையே "தந்நிஷ்டஸ்ய" என்கிற ஸூத்ரத்திலுள்ள தச்சப்தமும் சொல்லக்கடவதென்பது திண்ணம். "வாஸுதேவ மநாராத்ய கோ மோக்ஷம் ஸமவாப்ஸ்யதி" என்பது முதலான பல ப்ரமாண வசனங்களை இங்கு அநுஸந்திப்பது.

48. ஆக, மோக்ஷ ஹேதுத்வமாகிற லிங்கத்தினால் ஸச் சப்தத்தின் பொருளை நிஷ்கர்ஷிப்பவரான வியாஸ முனிவர் தமது ஸூத்ரத்தில் நாராயணனையே கருதினரென்பது நிச்சயம். ஸச்சப்த வாச்யன் நாராயணனே என்பது மற்றொரு ப்ரகாரத்தாலும் நிர்ணயிக்கத்தக்கதாம். அதாவது. புருஷ ஸூக்தத்திலும். உத்தர நாராயணத்திலும் "ஸர்வாணி ரூபாணி விசித்ய தீர: | நாமாநி க்ருத்வா அபிவதந் யதாஸ்தே" என்பதனால் நாமரூப வ்யாகர்த்தாவாக இருக்குந் தன்மை சொல்லப்பட்டது. இது ஸத்வித்யா ப்ரகரணத்திலும் "ஸேயம் தேவதா இமாஸ் திஸ்ரோ தேவதா அநேந ஜீவேநாத்மநா அநுப்ரவிச்ய நாமரூபே வ்யாகரோத்" என்றோதப் பட்டிருப்பது. ஸச்சப்தவாச்யன் நாராயணனேயென்பதற்கு ப்ரத்யபிஜ்ஞாபகமாம்.

49. "கதிஸாமாந்யாத்" என்கிற ஸூத்ர விவரணம்.

ஈக்ஷத்யதிகரணத்திலிருந்து மேலே நாமெடுத்துக் காட்டின இரண்டு ஸூத்ரங்களில் "தந்நிஷ்டஸ்ய மோக்ஷோபதேசாத்" என்கிற முந்தின ஸூத்ரத்தைப் பற்றிச் சொல்லவேண்டுமவை சொன்னோம் மேல்; இனி "கதிஸாமாந்யாத்" என்கிற அடுத்த ஸூத்ரத்தைப் பற்றிச் சொல்லுகிறோம். [கதிஸாமாந்யாத்.] கதியாவது ப்ரவ்ருத்தி; அதாவது அர்த்த போதகத்வம்; [ஸாமாந்யாத்] அது ஸமானமாயிருக்க வேண்டியது ஆவச்யகமாகையாலே என்று பொருள். காரண வாக்யங்களெல்லாம் ஒரு மிடறாயிருக்கவேண்டுகையாலே என்றபடி. இது மிகவும் ஆவச்யகமானது. ஏவஞ்ச, "அத புருஷோ ஹ வை நாராயணோ காமயத", "ப்ரஜாஸ் ஸ்ருஜேயேதி", "ஏகோ ஹ வை நாராயண ஆஸீத்", "ந ப்ரஹ்மா நேசாநோ நேமே த்யாவாப்ருதிவீ" இத்யாதிகளான உபநிஷத்வாக்யங்களில் நாராயணனுக்கே ஜகத்காரணத்வம் ஓதப்பட்டிருக்கையாலே ஸத்வித்யையிலுள்ள காரணவாசகங்களான ஸாமாந்ய சப்தங்களுக்கு [ஸச்சப்த தேவதா சப்தங்களுக்கு] நாராயணனென்கிற தேவதா விசேஷத்திலே பர்யவஸானமின்றிக்கே யொழிந்தால் காரணவாக்யங்களுக்கெல்லாம் ஐககண்ட்யம் ஸம்பவிக்கமாட்டாது. ஆகவே ப்ரக்ருதங்களான ஸச்சப்த தேவதா சப்தங்கள் நாராயணன் பக்கலிலே பர்யவஸிக்கின்றனவாதலால் ப்ரதாநம் ப்ரக்ருத ஸச்சப்த வாச்யமன்று என்பதாக "கதிஸாமாந்யாத்" என்கிற ஸூத்ரத்திற்குப் பொருளாகத் தேறி நின்றது.

50. அதிகரணந்தோறும் விஷயவாக்யங்கள் நாராயண பரங்களேயென்று காட்டுதல்.

பல சொல்லி என்? ஸாரமாகச் சொல்லலாவதிவ்வளவே. ஸூத்ரங்களின் பொருளை நிர்வஹிப்பதற்கு உபநிஷத்துக்களிலிருந்து விஷயவாக்யங்கள் கொள்ளப்படுகின்றனவென்பது யாவருமறிந்ததே. சங்கர பாஷ்யத்திலும் ஸ்ரீ பாஷ்யத்திலும் பெரும்பாலும் விஷயவாக்யங்கள் வெவ்வேறாகக் கொள்ளப்படாமலிருப்பதைக் காண்கிறோம். அந்த விஷயவாக்யங்களிலெல்லாம் சொல்லப்படுகிற தன்மைகள் ஸ்ரீமந்நாராயணனுக்கே அஸாதாரணங்களென்பது ச்ருதிபுராணாதிகளில்

ப்ரஸித்தம்—என்கிற விதனையும் முக்யமாகக் கூறிக்கொள்க. ஆனந்தமயத்வம், ஆதித்ய மண்டலத்திலுள்ளிருந்தல், புண்டரீகாக்ஷத்வம், அபஹதபாப்மத்வம், மோக்ஷார்த்த உபாஸநவிஷயத்வம், அக்நி இந்திரன் முதலிய ஸர்வ தேவதைகளுக்கும் அந்தர்யாமியா யிருத்தல், ஸர்வ பூதங்களுக்கும் அந்தர்யாமியா யிருத்தல் இத்யாதிகளான தரும விசேஷங்களுக்கு இருப்பிடமான வஸ்துவே ஜகத்காரணமாகக்கூடியதென்று நிஷ்கர்ஷிக்கின்ற ஸூத்ரகாரருடைய உள்ளத்தில் ஸ்ரீமந்நாராயணனே உறைந்திருக்கின்றானென்பது பிராமாணிகர்களுக்கு அறிவரிதன்று. இனி, ஆதிசங்கராசாரியர் நாராயண பாரம்யத்தையே ஸ்தாபித்தவரென்பது இங்கு ப்ராஸங்கிகமாக நிரூபிக்கப்படுகிறது.

51. ஆதிசங்கராசார்யருடைய நாராயண பக்தியை விளக்குதல்.

பகவத்பாதர் இயற்றிய விஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் தேவதாந்தரங்களுக்கு அவரத்வத்தை நிலை நாட்டி ஸ்ரீமந்நாராயணனுக்குப் பரத்வம் ஸ்தாபித்திருப்பது கதிராயிரமிரவி கலந்தெரிந்தா லொப்பவிளங்கா நின்றது. விஷ்ணு ஸஹஸ்ர நாமத்திற்கு பாஷ்யம் செய்த பகவத் பாதர் சிவ ஸஹஸ்ர நாமத்திற்கு ஏன் பாஷ்யம் செய்யவில்லை? என்று வினவினால், "அப்போது சிவஸஹஸ்ரநாம ஸ்துதியில்லை; பிற்பட்ட காலத்தில் தான் அஃது உண்டாயிற்று; ஆதலால்தான் அதற்கு பாஷ்யம் செய்ய ப்ரஸக்தி யுண்டாகவில்லை" என்கிறார்கள். அது நிற்க.

52. சாங்கர ப்ரஹ்மஸூத்ர பாஷ்யத்தில் ஒரு விஷயம்.

பாஞ்சராத்ராகம ப்ராமாண்யாதிகரணத்தில், "உத்பத்த்யஸம்பவாத்" என்கிற ஸூத்ர பாஷ்யத்தில் "தத்ர பாகவதா மந்யந்தே" என்று தொடங்கி பாஞ்சராத்ராகம ப்ரமேயங்களான விஷயங்கள் மூன்றென்று ஸங்க்ரஹித்து, அவற்றுள் இரண்டு விஷயங்களில் தம்முடைய ஸம்மதியைக் காட்டி, மூன்றாவதான ஒரு விஷயத்தில் மட்டும் வைமத்யம் காட்டியுள்ளார், பகவத்பாதர், தமக்கு ஸம்மதமாகக் காட்டின இரண்டு விஷயங்கள் இவை:—(இங்கு அவருடைய பங்க்திகளையே உதாஹரிப்போம்). "தத்ர யத்தாவதுச்யதே யோஸௌ நாராயண: ப்ரஸித்த: பரமாத்மா ஸர்வாத்மா இதி, தத் ந நிராக்ரியதே. யதபி தஸ்ய பகவத: அபிகமநாதிலக்ஷணமாராதநம் அஜஸ்ரம் அநந்யசித்ததயா அபிப்ரேயதே, ததபி ந ப்ரதிஷித்யதே; ச்ருதி ஸ்ம்ருத்யோரீச்வரப்ரணிதாநஸ்ய ப்ரஸித்தத்வாத்" என்பன அவருடைய பாஷ்ய பங்க்திகள். இவற்றால், ஸ்ரீமந்நாராயணனுக்கே பாரம்ய ப்ரதிஷ்டாபனத்தில் பகவத் பாதர் ஊக்கமுடையவரென்பது மறக்கத்தக்கதன்று.

53. ஈச்வராதி ஸாமாந்ய சப்தங்களுள்ள விடங்களில் வாஸுதேவ நாராயணாதி விசேஷ சப்தங்களையிட்டு வியாக்யானம் செய்யத் தொடங்கினவரும் பகவத் பாதரேயாவர். மேலே யெடுத்துக் காட்டின உத்பத்த்யஸம்பவாதிகரண பாஷ்ய பங்க்தியில் 'பகவதோ நாராயணஸ்ய அபிகமநாதிலக்ஷணமாராதநமஜஸ்ரம்' என்ற விடத்தில் [அநந்யசித்ததயா] என்றெழுதப்பட்டுள்ளதில் இதாநீந்தனர்கள் கண்மூடிகளாயிருக்கின்றனர். ருத்ராதிகளான அந்யர்களிடத்திலும் சித்தத்தை வைத்துச் செய்யப்படுகிற ஸ்ரீமந்நாராயணாராதநம் அநந்ய சித்தக்ருதமாக

எப்படியாகுமென்பதை அவர்கள் ஆலோசிக்க மாட்டிற்றிலர். நாராயணனைப் பரிவாரத்தோடுங்கூட ஆராதிப்பதும் சிந்திப்பதும் செய்தால் இது அநந்யசித்தத்வத்திற்கு விரோதமாகுமோ! என்று அவர்கள் கேட்கக்கூடும். ருத்ராதிகளிடத்தில் ஸ்ரீமந்நாராயணபரிவாரத்வப்ரதிபத்தி குறையற்றதாகில் குசலமேயாகும்.

54. ஆதிசங்கராசார்யருடைய கீதாபாஷ்ய ஸூக்திவிசேஷங்களைக் காட்டுதல்.

சங்கர பகவத்பாதர் விஷ்ணு பக்தரா? சிவ பக்தரா? என்று விசாரித்து நிர்ணயிக்க வேண்டுவது அவசியமானது. ச்ருதிதிஹாஸ புராணாதி ஸமஸ்த ப்ரமாண விசேஷங்களுள் பகவத்கீதையே முன்னணியில் நிற்கின்றதென்பதில் யார்க்கும் விவாதமிராது. எம்பெருமான்தானே சோதிவாய் திறந்து பணித்ததென்கிற மிக்க சிறப்பன்றோ இதற்குள்ளது. அப்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே யென்றும் ஸ்ரீமஹாவிஷ்ணுவே யென்றும் இதில் ஸகல வைதிகர்களும் ஏககண்டர்களே யாவர். இதில் விப்ரதிபத்தி கொண்ட வைதிகர் ஒருவருமிலர். இத்தகைய நூலில் ஸ்ரீமஹாவிஷ்ணுவின் பரத்வமும் தேவதாந்தரங்களின் அவரத்வமும் அடிக்கடி விளக்கப்பட்டுள்ளது.

55. பத்தாமத்யாயத்தில் (ச்லோ 8.) 'அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்தஸ் ஸர்வம் ப்ரவர்த்ததே'' என்றவிடத்தில் சங்கர பாஷ்யபங்க்தி இது காணீர்;- அஹம் பரம் ப்ரஹ்ம வாஸுதேவாக்க்யம், ஸர்வஸ்ய *ஜகத: ப்ரபவ:—உத்பத்தி:; மத்த ஏவ ஸ்திதிநாசக்ரியாபலோபபோக லக்ஷணம் விக்ரியாரூபம் ஸர்வம் ஜகத் ப்ரவர்த்ததே'' இத்யாதி.

56. மூலத்தில் நாராயணபதமோ விஷ்ணுபதமோ காணப்படாதவிடங்களிலெல்லாம் நியமேந விஷ்ணு நாராயண வாஸுதேவ பதங்களை யிட்டே பாஷ்யமியற்றுகிறார் பகவத்பாதர் என்பது வ்யபிசரியாத விஷயம்.

57. (9-22) அநந்யாச் சிந்தயந்தோமாம்'' என்றவிடத்தில் பரம் தேவம் நாராயணம்...பர்யுபாஸதே—தேஷாம் பரமார்த்த தர்சிநாம்'' என்று பாஷ்யமிட்டிருக்கின்ற பகவத்பாதர் பரதேவதையான நாராயணனை உபாஸிப்பவர்கள் யாவரோ அவர்களே உண்மையறிவாளிகள் என்று காட்டிநூராகிறார். ஸ்ரீமஹாவிஷ்ணுவுக்குப் போல ருத்ரனுக்கும் பாரம்யமுண்டு என்கிற வாதத்தை ஸஹிப்பவரல்லர் பகவத்பாதர்.

58. ஸ்ரீமந்நாராயண வ்யதிரிக்த தேவதைகளை பஜிப்பவர்களைப் பற்றின ப்ரஸ்தாவம் கீதையில் இல்லாமற் போகவில்லை. (7-20) *காமைஸ் தைஸ் தைர் ஹ்ருதஜ்ஞாநா: ப்ரபத்யந்தே அந்யதேவதா:* என்று தொடங்கிச் சொல்லி வருகையில் *அந்தவத் து பலம் தேஷாம் தத்பவத்யல்பமேதஸாம்* என்று தலைக்கட்டப்பட்டுள்ளது. இந்த ச்லோகத்தின் பாஷ்யத்தின் முடிவில் பகவத்பாதர் எழுதியுள்ள வாக்கியம் பரம பக்தர்களை அவசமாகவே கண்ணீர் பெருக்க வைக்கின்றது.

59. அவ்விடத்திலுள்ள வாக்கியமிது காணீர்: *ஏவம் ஸமாநே அப்யாயாஸே மாமேவ ந ப்ரபத்யந்தே அநந்தபலாய; அஹோ கலு கஷ்டதரம் வர்த்ததே இத்யநு-க்ரோசம் தர்சயதி பகவான்* என்று. ஸ்ரீமந்நாராயணனை பஜிப்பவர்

களுக்கே அநந்தாக்ஷய பலன் பெறுவதற்கு அவகாசமுள்ளதென்று அறிந்தவர்களுங் கூட க்ஷுத்ர பலன்களை விரும்பி தேவதாந்தர பஜனம் செய்கிறார்களே! என்று பகவான் தானே கண்ணீர் விட்டழுது கதறுவதாக ஸாக்ஷாத் கரித்தன்றோ பகவத் பாதர் எழுதி யுள்ளார்

60. அதிலேயே பதினொராமத்யாயத்தில் விச்வ ரூபக் காட்சி என்பது அமைந்திருப்பதானது தேவதாந்தரங்களின் அவரத்வத்தைக் கையிலங்கு நெல்லிக் கனியாகக் காட்டுவதற்கேயன்றோ. அதில் மூன்றாவது ச்லோகத்தில்:—''பகவானே! நீயே பரமேச்வரனென்பது உண்மையே; அதைக் கட்கூடாகக் காண விரும்பு மெனக்கு உன்னால் வைஷ்ணவ ரூபத்தைக் காட்டிக் கொடுக்க முடியுமா? என்று அர்ஜுனன் தனது கருத்தை ஸூசிப்பித்தவளவில் ''பச்யாதித்யாந் வஸூந் ருத்ராந் அச்விநௌ மருதஸ்ததா'' என்று தன்னுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தினேகதே சத்தி லொடுங்கியிருந்த ஸமஸ்த தேவர்களையும் காணுமாறு காட்டிக் கொடுத்தருளினன் ஸ்ரீமந்நாராயணன்.

61. அதன் பிறகு அக்கண்ணபிரானருளிய திவ்ய சக்ஷுஸ்ஸாலே கண்ட அர்ஜுனன் பச்யாமி தேவாந் தவ தேவ தேஹே'' என்று தொடங்கி ப்ரஹ்ம ருத்ராதி ஸகல தேவதா கணங்களையும் அத்திருமேனியில் காண்பதாகப் பேசினன். இதை இந்திரஜாலமென்று சொல்லாமையினாலே அத்வைதவாதம் அடியறுப்புண்டது.

62. தேவதாந்தர பாரம்ய வாதமோ நெடுந்தூரத்தில் தள்ளப்பட்டொழிந்தது. நாராயணனில் வேறுபட்டதொரு தேவதை இங்ஙனே விச்வரூபம் காட்டித் தன் பக்கலில் நாராயணன் நிலைநாயிருக்கும் படியைக் காட்டிற்றுண்டோ? காட்டத் தான் முடியுமோ? *ருத்ராதித்யா வஸவோ யே ச ஸாத்யா விச்வேச்விநௌ மருதச்சோஷ்மபாச்ச, கந்தர்வ யக்ஷா ஸுரஸித்தஸங்கா வீக்ஷந்தே த்வாம் விஸ்மிதாச்சைவ ஸர்வே* என்னுமிந்த ச்லோகமானது விசேஷித்து ருத்ராதிகளின் அவரத்வத்தை அறுதியிடாநின்றதாயிற்று.

63. பகவத்பாத ஸூக்தி ஸாரமுணர்த்துதல்.

பகவத் கீதை ஆறாமத்யாயத்தில் முடிவான சுலோகமிது. *யோகிநாமபி ஸர்வேஷாம் மத்கதேநாந்தராத்மநா, ச்ரத்தாவாந் பஜதே யோ மாம் ஸ மே யுக்ததரோ மத:* என்பது. இங்கு சங்கர பாஷ்ய பங்க்தி வருமாறு:—''யோகிநாமபி ஸர்வேஷாம் ருத்ராதி த்யான பராணாம். மத்கதேன-மயி வாஸுதேவே ஸமாஹிதேன, அந்தராத்மனா அந்த: கரணேன, ச்ரத்தாவான்-ச்ரத்ததானஸ்ஸன், பஜதே-ஸேவதே யோமாம், ஸ மே-மம யுக்ததம: அதிசயேந யுக்த: மத:—அபிப்ரேத:'' என்று. இதற்கு விவரணம் அநபேக்ஷிதம். பக்ஷபாத மற்றவர்கள் நற்றெளிவு பெறுவர்கள்.

64. சங்கராசார்யருடைய ஸஹஸ்ர நாம பாஷ்ய ஸூக்திகள் காட்டுதல்.

பகவத்பாதர் ஸஹஸ்ர நாம பாஷ்யத்திலும் பல பல இதிஹாஸங்களை யெடுத்துக் காட்டி நாராயண பாரம்யத்தைத் திடப்படுத்தியுள்ளார். விஷ்ணுவின் தாழ்வையோ, தேவதாந்தரத்தின் உயர்வையோ ஓரிடத்திலும் அவர் காட்டினதில்லை.

65. கேசவநாம பாஷ்யத்தில் 'கோ ப்ரஹ்மேதி ஸமாக்யாத ஈசோஹம் ஸர்வதேஹிநாம், ஆவாம் தவாங்கே ஸம்பூதௌ தஸ்மாத் கேசவ நாமவாந்' என்று சொல்லிக் கொண்டே சிவபெருமான் இந்த கேசவ நாமத்தை ஸமர்ப்பித்த தாக ஹரிவம்சத்தில் சொல்லப்பட்டுள்ள இதிஹாஸத்தை உதாஹரித்துள்ளார் பகவத் பாதர்.

66. [அர்க்க:] என்னும் திருநாமத்தின் பாஷ்யத்தில் "ப்ரஹ்மாதிபி: பூஜ்யதமைரபி அர்ச்சநீயத்வாத் அர்க்க:"—என்ற விவரணம் காட்டினர். இங்கு ஆதி சப்தத்தால் முந்துற முன்னம் க்ரஹிக்கக்கூடியவர் பார்வதீபதியல்லவா? ஏன்? 'ஸ ப்ரஹ்மா ஸ சிவ:' என்றோதுகிற வேத புருஷன் பிரமனும் கடுத்தபடி சிவபிரானைச் சொல்லி வைத்திருப்பது பிரஸித்தமன்றோ?

67. [அமிதாசந:] என்னும் திருநாமத்தின் பாஷ்யத்திலும் "ஸம்ஹார ஸமயே விச்வமச்நாதீதி அமிதாசந:" என்று விவரித்தார் பகவத்பாதர். சிவபெருமான் விச்வ பஸ்ர்ப்பூதனல்லனே. 'நளிர்மதிச் சடையனும் நான்முகக் கடவுளும்' என்கிற திருவாசிரியப் பாசுரமும் இங்கு நிவேசிக்கத் தக்கது. 'அத்தா சராசரக்ரஹணாத்' என்கிற ஸூத்திரத்தில் க்ருத்ஸ்நமான சராசரத்தையும் உண்டவனென்று நிர்ணயிக்கப்பட்ட நாராயணன் சிவபெருமானை விட்டிட்டானென்ன ப்ரஸக்தியில்லையே. உட்கொள்ளப்பட்டவர்களில் சிவபெருமானே முதல்வனென்பது பகவத் பாத ஸித்தாந்தம்.

68. 'ஸர்வவாகீச்வரேச்வர:' என்கிற நாம பாஷ்யத்திலும் 'ஸர்வேஷாம் வாகீச்வராணாம் ப்ரஹ்மாதீநாமபி ஈச்வர:' என்றார் அவர்தாமே.

69. நிர்குண ப்ரஹ்ம வாதத்தை நிராகரித்தல்.

பரப்ரஹ்மம் நிர்க்குணம் என்று பிறர் செய்யும் வாதம் மிகவும் வருந்தத் தக்கது. ஹேய குணமில்லாமையைத் தெரிவிக்க வேண்டி உபநிஷத்துக்கள் சில விடங்களில் ப்ரஹ்மத்தை நிர்குணமென்று சொல்லி யிருப்பதுண்டு. எண்ணிறந்த திருக்கல்யாண குணமுடைமையை ஓதியிருக்கின்ற ச்ருதிசதங்களுக்கு விரோதமின்றிக்கே நிர்வாஹம் செய்யவேண்டுமன்றோ' அங்ஙனே நிர்வஹிக்குமளவில் நிர்க்குண ச்ருதிகளுக்கு ஹேயகுணமில்லாமையைக் கூறுவதில் தாத்பர்யம் என்றே சொல்லித் தீரவேண்டும்.

70. ப்ரதாநம் முதலானவை ஜகத் காரணமாகக் கூடுமென்று நேர்ந்த சங்கைகளைப் பரிஹரியா நின்ற சாரீரக மீமாம்ஸையானது பெரும்பாலும் அதிகரணந்தோறும் பரப்ரஹ்மத்தினிடத்திலுள்ள திருக்குணங்களையெடுத்துக்கொண்டே 'அத்தகைய குணங்களில்லாத வஸ்துக்களுக்கு காரணத்வம் ஸம்பவிக்கமாட்டாது' என்று தலைக் கட்டுகின்றது.

71. இக்காலத்தவர்ககளான அத்வைதிகள் தங்கள் நூல்களில் "ஆதிசங்கராசாரியாரும் ஸகுணப்ரஹ்மத்தையும் ஒப்புக்கொண்டிருப்பதுண்டு" என்றெழுதுகிறார்கள். இங்ஙனே யெழுதுமவர்களுக்கு அபஸித்தாந்த சித்தத்வம் தவிர வேறொன்றும் தேறாது.

72. நையாயிகர்கள் "உத்பந்நம் த்ரவ்யம் க்ஷணம் அகுணம் திஷ்டதி" என்பர்கள். பரப்ரஹ்மத்திற்கு உதபத்தி ஒப்புக்கொண்டாலாவது அது க்ஷணகாலம் நிர்க்குணமாக இருக்கவுமாகும்.

73 முமுக்ஷுக்களும் முக்தர்களும் நித்யர்களுமான ஸமஸ்த ஜீவராசிகளையும் தன்னுடைய குணாநுபவத்தினாலேயே உஜ்ஜீவிப்பிக்குமதான பரப்ரஹ்மம் க்ஷணமாத்ரமும் நிர்க்குணமாக இருக்கவில்லாது.

74. கூரத்தாழ்வானருளிச் செய்த ஸ்ரீவைகுண்ட ஸ்தவத்தில் "தூரே குணாஸ் தவ து ஸத்வரஜஸ்தமாம்ஸி தேந த்ரயீ ப்ரதயதி த்வயி நிர்க்குணத்வம், நித்யம் ஹரே நிகில ஸத்குணஸாகரம் ஹி த்வாமாமநந்தி பரமேச்வரமீச்வராணாம்" என்றுள்ள ச்லோக ரத்நம் இங்கு நித்யாநுஸந்தேயமாகக் கடவது.

75. நாமெழுதி வெளியிட்டுள்ள ஸ்ரீவைகுண்ட ஸ்தவ வியாக்கியானத்திலிருந்து சில பங்க்திகளை உதாஹரித்தே இதன் பொருளுணர்த்துகிறோம்; (நமது வியாக்கியான பங்க்திகள்)

நிர்குண ச்ருதிகளுக்கு என்ன கதியென்ன; அவற்றை நிர்வஹிக்க வேண்டும் வழி காட்டுகிறோம்: "நிர்குணம் நிரஞ்ஜநம்" இத்யாதி ச்ருதிகள் எம்பெருமான் பக்கலிலே குணங்களின் அத்யந்தாபாவத்தைச் சொல்லுகின்றனவல்ல. அப்படியாகில் "யஸ் ஸர்வஜ்ஞஸ் ஸர்வவித்" இத்யாதிகளான பரச்சத வாக்யங்களினால் எம்பெருமானுக்குச் சொல்லப்பட்ட குணபௌஷ்கல்யம் வ்யாஹதமேயாகும். ஒரு ச்ருதியும் வ்யாஹதார்த்தமாகாதபடி நிர்வஹிக்க வேண்டுமே. நிர்க்குணத்வத்தைச் சொன்னவிடம் ஹேயகுணராஹித்யத்தைச் சொல்லிற்றாகக் கொள்ளுமளவில் ஒரு விரோதமுமில்லையே. உத்ஸர்க்காபவாத ந்யாயம் இதற்குக் கை கொடுக்குமே. "[ஸத்வ ரஜஸ் தமாம்ஸி குணாஸ் தவ தூரே "[ஸத்வ ரஜஸ் தமோ குணங்கள் தேவரீருக்கு நெடுந்தூரத்திலுள்ளன. எம்பெருமான் பக்கலில் ரஜஸ்தமோ குணங்கள் இல்லையென்று சொல்லலாமத்தனை போக்கி ஸத்வகுணமும் இல்லையென்று சொல்லலாமோவென்று ஒரு சங்கை தோன்றும். "பரம ஸத்வ ஸமாச்ரய: க:" என்னும்படியுள்ள எம்பெருமான் பக்கலில் ஸத்வ குணமில்லை யென்னப்போகாது: ரஜஸ்தமோமிச்ரமான ஸத்வகுணமில்லை என்கிற தத்தனை. [தேந த்ரயீ ப்ரதயதி த்வயி நிர்க்குணத்வம்] அதையிட்டே வேதத்தில் நைர்குண்ய வாதம் ப்ரவ்ருத்தமாயிற்று. குண ஸாமான்யாபாவத்தையே ச்ருதி விவக்ஷிக்கிறதென்ன வொண்ணாதோவென்னில்; ஒண்ணாமையை உபபாதிக்கிறது உத்தரார்த்தம் [நித்யம் ஹரே! நிகில ஸத்குண ஸாகர மிதயாதி] "பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாநபலக்ரியா ச" ஸத்யகாமஸ் ஸத்யஸங்கல்ப:" இத்யாதி ச்ருதிகள் எம்பெருமானை ஸகல கல்யாண குண நிதியாக ஓதாநிற்க, அதற்கு முரணாகப் பொருள் கொள்ள வொண்ணாதிறே. "அக்நீஷோமீயம் பசுமாலபேத" இத்யாதிகளில் விஹிதமான ஹிம்ஸையைத் தள்ளியன்றோ "மா ஹிம்ஸ்யாத் ஸர்வ பூதாநி" இத்யாதி நிஷேத ச்ருதிகளுக்குப் பொருள் நிர்வஹியா நின்றோம். அது போலவென்க.

76. இதரர்களின் ஸர்வாத்மநா ப்ரமாண வைதேசிகத்யம்

முக்கியமாகக் குறிக்கொண்மின்; ''பாஞ்சராத்ரம் அப்ரமாணம்'' என்கிற பிறர் உபநிஷத்துக்கள் ப்ரஹ்மஸூத்ரங்கள் இதிஹாஸ புராணங்கள் முதலியவற்றை ப்ரமாணமாக ஒப்புக்கொள்பவர்கள்போலும். இது வாங்மாத்ரேண அங்கீகாரமே யொழிய வேறில்லை. ''பாஞ்சராத்ரத்தை ப்ரமாணமாக வொப்புக் கொண்டால் என்ன ஹாநி விளைந்திடும்? ச்ருதிஇதிஹாஸ புராண ஸூத்ரங்களை ப்ரமாணமென்று ஒப்புக்கொண்டதனால் என்ன லாபம் விளைந்திட்டது? என்று இவர்களை வினவினால் இவர்கள் என்ன விடையிறுப்பார்களோ, பார்க்கவேணும்.

77. ,,வேத: ப்ராசேதஸாதாஸத் ஸாக்ஷாத் ராமாயணாத்மநா'' என்று வேத ப்ராதுர்ப்பாவ விசேஷமாகக் குலாவப்படுகிற ஸ்ரீராமாயணத்தில் ஆதியோடந்தமாகத் திருக்கல்யாண குணகண ப்ரஸ்தாவமே விளங்கா நின்றது. வான்மீகி முனிவர் தம்மிடம் வந்து சேர்ந்த நாரத மஹர்ஷி பக்கலில் கதை கேட்க விரும்பிற்றிலர்; திருக்குணங்கள் கேட்கவே விருப்பத்தை வெளியிட்டார்.

78. அதில், ''கோ ந்வஸ்மிந் ஸாம்ப்ரதம் லோகே குணவாந்'' என்றும் ''பஹவோ துர்லபாச் சைவ யே த்வயா கீர்த்திதா குணா:'' என்றும் உபக்ரமத்தில் காணும் வினவிடைகளில் இஃது அறியலாகும்.

79. எம்பெருமானுடைய திருவவதாரங்களெல்லாம் குணபரீவாஹ ரூபங்களென்று ஸாரஜ்ஞர்கள் நிஷ்கர்ஷித்துள்ளார்கள். எம்பெருமான் ஸ்வாத்மாவிலே நிரம்பியுள்ள திருக்குணங்களை வெளியிட்டுத் தரிப்பதற்காகவே திருவவதாரங்கள் செய்கிறனென்கை. ஸ்ரீராமக்ருஷ்ணாதி ரூபேண திருவவதரித்து வேதஸித்தங்களும் ஸ்வாபாவிகங்களுமான திருக்குணங்களை ஸகல பக்தர்களும் அநுபவிக்கும்படி செய்தருளினன் பகவான்' இதை 'அறியாதாரில்லை. 'ப்ரஹ்மம் குண சூந்யமே' என்பவர்கள் ஸ்ரீராமாயணம் முதலான இதிஹாஸ புராணங்களுக்கும் அவற்றுக்கு மூலமான ச்ருதிகளுக்கும் நெடுந்தூரத்திலிருக்கத் தக்கவர்களென்பது அதிவாதமுமன்று, ஆக்ரஹ வார்த்தையுமன்று.

80. ''இதிஹாஸ புராணாப்யாம் வேதம் ஸமுபப்ருஹ்மயேத்'' என்று பொதுவாகவும் ''வேதோபப்ரும்ஹணார்த்தாய தாவக்ராஹயத ப்ரபு:'' என்று சிறப்பாகவும் சொல்லியுள்ள மஹர்ஷிகள் வேதப் பொருள்களே இதிஹாஸ புராணங்களில் வெட்ட வெளிச்சமாகக் காணப்படுகின்றனவென்று ப்ரதிஜ்ஞை செய்தவர்களாவர்.

81. ஆக, திருக்குணங்களிலேயே நோக்காகத் திருவவதரித்த வேதங்களுக்கும் தது பப்ரும்ஹணங்களுக்கும் சிறிதும் பொருந்தாதபடி நிர்குணப்ரஹ்ம வாதம் செய்பவர்களைப்பற்றி இன்னமும் பேச வேண்டியதொன்றுமில்லையென்று தலைக்கட்டி நிற்கின்றோம்.

82. எம்பெருமானார் நிஷ்கர்ஷித்தருளின வேதாந்தப் பொருள்களெல்லாம் ஆழ்வார்களின் ஸ்ரீஸூக்திகளை அவலம்பித்தேயாதலால் அடுத்தபடியாக அதனை விவரிப்போம். அது அடுத்த இதழில் வரும். ... ...

ஸ்ரீபகவத் ராமானுஜ ஸித்தாந்தஸாரம் முற்றுப்பெற்றது.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

——: o :——